بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 5

இதழ் 31

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

08 துல்ஹஜ்ஜா 1441 ஹிஜ்ரி கமரி 30 வஃபா 1399 ஹிஜ்ரி ஷம்ஸி
30 ஜூலை 2020


## அல்லாஹ்வின் கட்டளை

يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَاْكُلُوْٓا اَمْوَالَكُمْ بَيْنَكُمْ بِالْبَاطِلِ اِلَّآ اَنْ تَكُوْنَ تِجَارَةً عَنْ تَرَاضٍ مِّنْكُمْ ۗ وَلَا تَقْتُلُوْٓا اَنْفُسَكُمْ ۗ اِنَّ اللّٰهَ كَانَ بِكُمْ رَحِيْمًا

நம்பிக்கையாளர்களே! நீங்கள் உங்களுக்கிடையில் ஒத்துக்கொண்ட வாணிகத்தின் மூலமாக அல்லாமல், உங்கள் பொருளை ஒருவருக்கொருவர் தவறான முறையில் விழுங்காதீர்கள். நீங்கள் உங்களையே கொலை செய்யாதீர்கள். அல்லாஹ் உங்களுக்கு மேன்மேலும் கருணை செய்பவனாவான்.(4:30)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**இறைவனது இந்த அருள் மற்றும் வெகுமதிக்கு நன்றி செலுத்துங்கள். மேலும் அந்த நன்றி செலுத்துதல் இதுவாகும். அதாவது உண்மையான உள்ளத்துடன் நற்செயல்களை செய்யுங்கள். அது சரியான கொள்கைக்குப் பிறகு இரண்டாவது அம்சமாக இருக்கின்றது. மேலும் உங்களது செயல் நடைமுறைகளின் மூலமாக உதவி தேடியவாறு, அவன் இந்த சரியான கொள்கையில் நிலைத்திருக்கச் செய்வததற்காகவும், நற்செயல்களை செய்வதற்கு நற்பாக்கியத்தை வழங்குவதற்காகவும் துஆ செய்யுங்கள்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

### இக்ரிமாவின் தூய முன்மாதிரி

ஒரு சந்தர்ப்பத்தில் நிராகரிப்பவர்களுடன் சண்டை நடந்தது. இக்ரிமா இஸ்லாமிய படையின் போர்த் தளபதியாக இருந்தார்கள். நிராகரிப்பவர்கள் மிகவும் கடுமையாக போர் தொடுத்தார்கள். எதுவரை என்றால் இஸ்லாமிய படையின் தோல்வியை தழுவும் நிலையை அடைந்தது. இக்ரிமா இதனைக் கண்டபோது தனது குதிரையை விட்டு இறங்கினார்கள்.

அப்போது மக்கள் கூறினார்கள்: நீங்கள் ஏன் (குதிரையிலிருந்து) இறங்கினீர்கள். எந்நிலை ஏற்பட்டாலும் குதிரை பயன் தரலாம். அதற்கு இக்ரிமா அவர்கள், இப்போது எனக்கு இறைதூதர் (ஸல்) அவர்களுக்கு எதிராக சண்டையிட்டு வந்த அந்த காலம் நினைவுக்கு வந்து விட்டது. உயிரைக் கொடுத்தாவது பாவத்திற்கான பரிகாரத்தை பெற வேண்டும் என்று நான் விரும்புகின்றேன்.

இப்போது பாருங்கள். நிலைமை எங்கிருந்து எங்கு வந்து சென்று விட்டது. அதாவது மீண்டும் மீண்டும் அவர்களை நல்ல சிறப்பம்சங்களை கொண்டவராக அவர்கள் நினைவு கூறப்படுகின்றார்கள்.

இதனை நினைவில் கொள்ளுங்கள். எவர்கள் இறைவனது திருப்தியை தன்னுள் ஏற்படுத்திக் கொள்கின்றார்களோ அத்தகைய மக்களிடம் தான் இறைவனது திருப்தியும் இருக்கின்றது. அல்லாஹ் அந்த மக்களைப் பற்றி ரலியல்லாஹு அன்ஹும் (அல்லாஹ் அவர்கள் மீது திருப்தி கொண்டான்) என்று கூறினான். எனது அறிவுரை என்னவென்றால், ஒவ்வொரு நபரும் இந்த நல்லொழுக்கத்தை பேணி நடக்க வேண்டும்.

### சரியான கொள்கையும் நற்செயல்களும்

இதுமட்டுமின்றி மேலும் இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. இதனை கருத்தில் கொள்வது கலப்பற்ற உண்மையாளர்களின் பணியாக இருக்க வேண்டும். இவற்றில் ஒன்று, சரியான கொள்கையாகும். இது அல்லாஹ்வின் மாபெரும் அருளாகும். அதாவது அவன் முழுமையான சரியான கொள்கையின் வழிகளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெரும் முயற்சியின் மூலமாக நமக்கு காட்டிக் கொடுத்துள்ளான். அந்த வழி இந்த காலத்தில் உங்களுக்கு வெளிப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது. பெரும்பாலான ஆலிம்கள் தற்போது வரை இதிலிருந்து இழப்பிற்குரியவர்களாகவே இருக்கின்றார்கள்.

எனவே இறைவனது இந்த அருள் மற்றும் வெகுமதிக்கு நன்றி செலுத்துங்கள். மேலும் அந்த நன்றி செலுத்துதல் இதுவாகும். அதாவது உண்மையான உள்ளத்துடன் நற்செயல்களை செய்யுங்கள். அது சரியான கொள்கைக்குப் பிறகு இரண்டாவது அம்சமாக இருக்கின்றது. மேலும் உங்களது செயல் நடைமுறைகளின் மூலமாக உதவி தேடியவாறு, அவன் இந்த சரியான கொள்கையில் நிலைத்திருக்கச் செய்வததற்காகவும், நற்செயல்களை செய்வதற்கு நற்பாக்கியத்தை வழங்குவதற்காகவும் துஆ செய்யுங்கள்.


இறைவணக்கத்தின் அம்சத்தில் நோன்பு நோற்பது, தொழுகையை பேணுவது மற்றும் ஸக்காத் போன்றவற்றை செலுத்துவது ஆகிய அம்சங்கள் அடங்கும். இப்போது சிந்தனை செய்யுங்கள். இப்போது சிந்தனை செய்யுங்கள். அதாவது தொழுகை இருக்கின்றது. இது உலகத்திற்கு வந்தது. ஆனால் உலகத்திலிருந்து வரவில்லை.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 128,129 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

**இளைஞர்கள் சீர்திருந்தாதவரை சமுதாயங்கள் சீர்திருந்தாது. (முஸ்லிஹ் மவ்வூது)**


O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.



பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இப்னு அவ்ஃபே! நீர் சுவர்க்கத்தில் தவழ்ந்து சென்றவாறு நுழைவீர். ஏனென்றால் நீர் செல்வந்தராவீர். எனவே சுவர்க்கத்தில் நடந்து சென்று நுழைவதற்காக நீர் இறை வழியில் செலவு செய்வீராக**

---

**பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க சஹாபியும், இறை வழியில் பொருள் தியாகம் செய்வதருமான ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் மேலும் இஸ்லாம் மற்றும் இஸ்லாத்தின் தோற்றுனர் மீது பேரன்பு கொண்ட, உயர் தரமான கலப்பற்ற தன்மையை கொண்டிருந்த, பற்றுணர்வுமிக்க மற்றும் அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தின் தலைவரான ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

---

**உஸ்மான் பின் அஃபான் (ரலி) மற்றும் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) ஆகியோர் அல்லாஹ்வின் கருவூலங்களில் இரண்டு கருவூலங்கள் ஆவர். அவர்கள் அல்லாஹ்வின் திருப்தியை வேண்டி செலவு செய்கின்றனர்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 26 ஜுன் 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **26 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ۔
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

கடந்த குத்பாவில் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு இடம் பெற்றிருந்தது. அதில் சில நற்குறிப்புகள் எஞ்சியிருந்தன. அதனை இன்று நான் எடுத்துரைப்பேன். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களின் வள்ளல் தன்மை பிரபல்யமானதாக இருந்தது. அன்னார் ஏராளமான பொருள் தியாகங்கள் செய்துள்ளார்கள். இந்த அடிப்படையில் இன்று பெரும்பாலான சான்றுகள் இடம் பெறும்.

ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் இவ்வாறு வஸிய்யத் செய்தார்கள். அதாவது பத்ர் போரில் பங்கு பெற்ற ஒவ்வொரு சஹாபிக்கும் 400 தினார்கள் தனது சொத்திலிருந்து தனக்குப் பிறகு வழங்கப்பட வேண்டும் என அன்னார் வஸிய்யத் செய்தார்கள். அதன் அடிப்படையில் அமல் செய்யப்பட்டது. அப்போது அந்த சஹாபாக்களின் எண்ணிக்கை 100 ஆக இருந்தது.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 4 பக்கம் 293 அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தபூக் போருக்கு ஆயத்தமாகும்படி சஹாபாக்களுக்கு கட்டளையிட்டபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், செல்வந்தர்கள் அல்லாஹ்வின் வழியில் செல்வத்தையும், சவாரிகளுக்கான ஏற்பாடுகளை செய்யும்படியும் அறிவுறுத்தினார்கள். அப்போது எல்லோரையும் விட முதலில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வந்தார்கள். மேலும் தனது வீட்டிலிருந்த அனைத்து செல்வத்தையும் கொண்டு வந்து விட்டார்கள். அவை 4000 திர்ஹமாக இருந்தன.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம், நீங்கள் குடும்பத்தினருக்காக எதனையும் விட்டு வைத்துள்ளீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு அன்னார், குடும்பத்தினருக்காக அல்லாஹ்வையும், அல்லாஹ்வின் தூதரையும் விட்டு விட்டு வந்துள்ளேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தனது வீட்டிலிருந்து பாதி செல்வத்தை எடுத்து வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், நீங்கள் உங்கள் குடும்பத்தினருக்காக எதனையும் விட்டு விட்டு வந்துள்ளீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு அன்னார், பாதியை விட்டு விட்டு வந்துள்ளேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள், 100 அவ்கியா செல்வத்தை வழங்கினார்கள். ஓர் அவ்கியா என்பது 40 திர்ஹம் மதிப்பு கொண்டதாகும். அதாவது சுமார் 4000 திர்ஹம் வழங்கினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உஸ்மான் பின் அஃபான் (ரலி) மற்றும் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) பூமியிலுள்ள அல்லாஹ்வின் கருவூலங்களில் இரண்டு கருவூலங்கள் ஆவர். அதனை அவர்கள் அல்லாஹ்வின் திருப்திக்காக செலவிடுகின்றனர்.

(அஸீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 3 பக்கம் 184 கஸ்வா தபூக் – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & லுகாத்துல் ஹதீஸ் தொகுதி 4 பக்கம் 527)

ஹஸ்ரத் உம்மே பக்ர் பின்த் மஸ்ஊத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடமிருந்து ஒரு நிலத்தை 40000 தினார் கொடுத்து விலைக்கு வாங்கினார்கள். மேலும் பனூஸ் கராவிலுள்ள ஏழைகள், தேவையுடையவர்கள் மற்றும் உம்மஹாத்துல் முஃமினீன் ஆகியோர்களுக்கு பங்கிட்டு கொடுத்தார்கள்.

மசூர் பின் மஹ்ரமா அவர்கள் கூறுகின்றார்கள்: நான் அந்த நிலத்திலிருந்து ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்குரிய பங்கை கொடுத்தபோது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், இதை யார் தந்தது என்று கேட்டார்கள். அதற்கு நான், ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் என்று கூறினேன். அப்போது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதாக கூறினார்கள். அதாவது எவர் மிக உயர் தரமான பொறுமை செய்யக்கூடியவராக இருப்பாரோ அவரே எனக்குப் பிறகு உங்களுடன் அழகிய முறையில் நடப்பவராக இருப்பார்.

பின்னர் அன்னார் இவ்வாறு துஆ செய்தார்கள். அல்லாஹ்வே! அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களுக்கு சுவர்க்கத்தின் சல்சபீல் நீரூற்றிலிருந்து பானத்தை வழங்குவாயாக.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 98 அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & குலாம் பாரி ஸைஃப் சாஹிப் எழுதிய ரோஷன் சிதாரே தொகுதி 2 பக்கம் 119)

ஓர் அறிவிப்பில் உள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நல்லவராகவும், உண்மையாளராகவும் இருப்பவரே எனக்குப் பிறகு எனது குடும்பத்தினரை கருத்தில் கொள்பவராக இருப்பார்.

ஆக ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் உம்மஹாத்துல் முஃமினீன்களை சவாரிகளில் ஹஜ் செய்வதற்காக அழைத்துச் செல்வார்கள். மேலும் அவர்கள் அமர்ந்திருக்கும் இடத்தில் பல்லாக்கில் திரையிட்டு விடுவார்கள். மேலும் வழிப்பாதையில் பர்தா அகன்றுவிடுகின்ற அளவிற்கு சூழல் ஏற்படாத இடத்தையே தங்குமிடமாக தேர்ந்தெடுப்பார்கள். மேலும் அவர்கள் சுதந்திரமாக தங்கும் வகையில் பர்தாவை பேணியவாறு அவர்களை கருத்தில் கொள்வார்கள்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுல் சஹாபா தொகுதி 4 பக்கம் 292 அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஒரு முறை மதீனாவில் ஒரு பெரும் வறட்சி ஏற்பட்டது. அப்போது சிரியாவிலிருந்து 700 ஒட்டகங்களில் கோதுமையும் இதர உணவுப் பொருட்களும் மதீனாவிற்கு ஒரு குழுவினரால் கொண்டு வரப்பட்டது. அதனால் மதீனாவில் எல்லாப் பக்கமும் பரபரப்பு ஏற்பட்டது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், என்ன பரபரப்பு என்று கேட்டார்கள். அப்போது ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களுடைய 700 ஒட்டகங்களில் குழுவினர் வந்துள்ளனர். அதில் கோதுமையும், இதர உணவுப் பொருட்களும் உள்ளன என்று கூறப்பட்டது.

உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து இவ்வாறு கூற கேட்டுள்ளேன். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்கள் சுவர்க்கத்தில் தவழ்ந்து சென்றவாறு நுழைவார் என்று அன்னார் (ஸல்) அவர்கள் கூறி வந்தார்கள்.

உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் இந்த அறிவிப்பு ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களுக்கு கிடைத்ததும் அன்னார் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை சந்திக்க சென்றார்கள். மேலும் கூறினார்கள்: தாயே! நான் உங்களை சாட்சியாக வைத்து கூறுகின்றேன். இந்த அனைத்து உணவு தானியங்களும் மேலும் இதர உணவுப் பொருட்களும் மேலும் ஒட்டகங்களுடைய கடிவாளம் உட்பட அனைத்தையும் இறைவனுடைய சுவர்க்கத்தில் நான் நடந்து செல்ல வேண்டும் என்பதற்காக அல்லாஹ்வின் வழியில் அர்ப்பணித்து விட்டேன்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 478 அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & குலாம் பாரி ஸைஃப் சாஹிப் எழுதிய ரோஷன் சிதாரே தொகுதி 2 பக்கம் 110–111)

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களின் இறை வழியில் செலவு செய்தல் தொடர்பான பெரும்பாலான சம்பவங்களை சஹாபாக்களுக்கு உதவி செய்யக்கூடியவர்கள்தான் ஒன்று திரட்டியுள்ளார்கள்.

அஸதுல் காபா என்ற நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் இறை வழியில் செலவிடக்கூடியவர்களாக இருந்தார்கள். ஒரு முறை அவர்கள் ஒரு நாளில் முப்பது முப்பது அடிமைகளை விடுதலை செய்திருந்தார்கள்.

(குலாம் பாரி ஸைஃப் சாஹிப் எழுதிய ரோஷன் சிதாரே தொகுதி 2 பக்கம் 110)

ஒரு முறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு கொஞ்சம் பணத்திற்கான அவசியம் ஏற்பட்டது. எனவே அன்னார் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களிடம் சற்று கடன் கேட்டார்கள். அதற்கு அன்னார் கூறினார்கள்: அமீருல் முஃமினீன் அவர்களே! தாங்கள் என்னிடம் ஏன் கேட்கின்றீர்கள்? உங்களால் பைத்துல் மாலிடமிருந்து கடன் பெற முடியுமே? மேலும் உஸ்மான் அல்லது வேறு ஆற்றல் படைத்தவர்களிடமிருந்து கடன் வாங்கியிருக்க முடியுமே? என்று கேட்டார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதற்கு இவ்வாறு பதிலளித்தார்கள். நான் ஏன் இவ்வாறு செய்கின்றேன் என்றால் ஒருவேளை பைத்துல் மாலின் தொகையை திருப்பிக் கொடுக்க நான் மறந்து விடக்கூடும். வேறு ஒருவரிடமிருந்து நான் கடன் பெற்றால் ஒருவேளை எனது அந்தஸ்தை கருத்தில் கொண்டு அல்லது வேறொரு காரணத்தினால் அவர் என்னிடம் தொகையை திருப்பிக் கேட்காமலிருக்க வாய்ப்பு உள்ளது. மேலும் நானும் திருப்பிக் கொடுக்க மறந்து விடக்கூடும். ஆனால் நீங்கள் உங்களது செல்வத்தை என்னிடமிருந்து அவசியம் கேட்டு பெற்றுக் கொண்டு விடுவீர்கள்.

(பஷீர் சாஜித் அவர்கள் எழுதிய அஷ்ரா முபஷ்ஷிரா என்ற நூல் பக்கம் 882 – லாஹூரிலுள்ள அல் பத்ர் அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

அவர்களுக்கிடையே நல்ல உறவு இருந்து வந்தது. அன்னாருக்கு தேவை ஏற்படும்போதெல்லாம் அன்னார் அவர்களிடமிருந்து கடன் பெற்று வந்தார்கள்.

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களின் மகன் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இப்னு அவ்ஃப் அவர்களே! நீர் சுவர்க்கத்தில் ஊர்ந்து கொண்டே சென்றவாறு நுழைந்து விடுவீர். ஏனென்றால் நீர் செல்வந்தராவீர். எனவே இறை வழியில் செலவு செய்வீராக. மேலும் நீர் நடந்து சென்றவாறு சுவர்க்கத்தில் நுழைவதற்காக இவ்வாறு செய்வீராக.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் செய்த முந்தைய அறிவிப்புடன் இந்த அறிவுப்பு ஒன்றுபட்டதாக உள்ளது.

ஆக அப்போது ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இறை வழியில் நான் எதனை செலவிட வேண்டும்? என்று கேட்டார்கள். அதற்கு உம்மிடம் உள்ளதை நீர் செலவு செய்யும் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

மேலும் அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் அனைத்தையும் செலவு செய்து விடவா? என்று கேட்டார்கள். அதற்கு ஆம் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்.

அதன் பிறகு ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் நான் எனது அனைத்து செல்வத்தையும் இறை வழியில் செலவு செய்து விடுவேன் என்று உறுதி பூண்டவாறு அங்கிருந்து சென்றார்கள்.

சிறிது நேரம் கழித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரை அழைத்தார்கள். மேலும் கூறினார்கள்: நீங்கள் சென்ற பிறகு ஜிப்ரீல் (அலை) அவர்கள் என்னிடம் வந்தார்கள். மேலும் அப்துர் ரஹ்மான் அவர்களை விருந்து உபசரிப்பு செய்யும்படியும், ஏழைகளுக்கு உணவளிக்கும்படியும், யாசிப்பவர்களுக்கு கொடுக்கும்படியும், மற்றவர்களை விட உறவினர்களுக்கு முதலில் செலவு செய்யும்படியும் வழிகாட்டுமாறு என்னிடம் கூறினார்கள். அவ்வாறு செய்தால் அவரின் செல்வம் தூய்மையாகி விடும்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 97 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & குலாம் பாரி ஸைஃப் சாஹிப் எழுதிய ரோஷன் சிதாரே பக்கம் 112)

மேலும் தூய செல்வத்திலிருந்து அல்லாஹ்வின் வழியில் இதுபோன்று செலவு செய்யப்பட்ட நிலையில் அவர் தவழ்ந்து அல்ல; மாறாக, அந்நிலையில் அவர் தனது பாதங்களால் நடந்து சுவர்க்கத்தினுள் நுழையக்கூடியவராக இருப்பார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் சுவர்க்கத்தில் செல்லும்போது முடிவு இவ்வாறே வெளிப்படும்.

ஒரு முறை 40000 திர்ஹம்களை அன்னார் இறைவழியில் கொடுத்து விட்டார்கள். பின்னர் ஒரு முறை 40000 தினார்களை இறைவழியில் தர்மமாக வழங்கினார்கள். மற்றொரு முறை 500 குதிரைகளை இறைவழியில் வழங்கினார்கள். பின்னர் மற்றொரு முறை 500 ஒட்டகங்களை இறைவழியில் வழங்கினார்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துல் சஹாபா தொகுதி 3 பக்கம் 478 அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & குலாம் பாரி ஸைஃப் சாஹிப் எழுதிய ரோஷன் சிதாரே தொகுதி 2 பக்கம் 111)

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களின் மகனான அபூ சல்மா அவர்கள் அறிவிக்கின்றார்கள். எங்களது தகப்பனார் உம்மஹாத்துல் முஃமினீன்களுக்காக ஒரு பெரும் தோட்டத்தை உயில் எழுதினார்கள். அந்த பெரும் தோட்டத்தின் மதிப்பு நான்கு லட்சம் திர்ஹமாக இருந்தது.

(குலாம் பாரி ஸைஃப் சாஹிப் எழுதிய ரோஷன் சிதாரே தொகுதி 2 பக்கம் 119)

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் இறைவழியில் வழங்குவதற்காக ஒரு முறை 50000 தினார்களை வஸிய்யத் செய்தார்கள். அன்னார் விட்டுச் சென்ற சொத்தில் ஓராயிரம் ஒட்டங்களும், மூவாயிரம் ஆடுகளும், நூறு குதிரைகளும் அடங்கும். அவை பகீயில் மேய்ந்து வந்தன.

மதீனாவிலிருந்து கிழக்கு பக்கத்தில் மூன்று மைல் தொலைவில் ஜரஃப் என்ற ஓர் இடம் உள்ளது. அங்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு சொந்தமான சில சொத்துக்கள் இருந்தன. அந்த இடத்தில் தண்ணீர் இரைக்கக்கூடிய 20 ஒட்டங்கள் மூலமாக அன்னார் விவசாயம் செய்து வந்தார்கள். அதன் மூலமாகவே குடும்பத்தினர் அனைவருக்கும் ஒரு வருடத்திற்கு தேவையான உணவு தானியங்கள் கிடைத்து வந்தன.

ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் தனக்குப் பிறகு தனது சொத்தாக எந்த அளவுக்கு தங்கத்தை விட்டுச் சென்றார்கள் என்றால் அவை கோடாரியால் வெட்டப்படும்போது மக்களின் கைகளில் பொக்களங்கள் ஏற்பட்டன.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 100,101 அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & குலாம் பாரி ஸைஃப் சாஹிப் எழுதிய ரோஷன் சிதாரே தொகுதி 2 பக்கம் 118)

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் 31 வது ஹிஜ்ரி ஆண்டில் மரணமடைந்தார்கள். சிலரது பார்வையில் அன்னாரின் மரணம் ஹிஜ்ரி 30 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. 72 ஆண்டுகள் அன்னார் உயிருடன் இருந்தார்கள். சிலரைப் பொருத்தவரை 78 வயது வரை உயிருடன் இருந்தார்கள். மேலும் அன்னார் ஜன்னத்துல் பகீயில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அன்னாரின் ஜனாஸா தொழுகையை நடத்தினார்கள். ஒரு கூற்றிற்கேற்ப ஹஸ்ரத் சுபைர் பின் அவாம் (ரலி) அவர்கள் அன்னாரின் ஜனாஸா தொழுகையை நடத்தினாகள்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுல் சஹாபா தொகுதி 4 பக்கம் 293 அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 100 அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களின் மரணத்தின்போது ஹஸ்ரத் சஅத் பின் மாலிக் அவர்கள் கட்டில் அருகே நின்று கொண்டு, வா ஜபல் என்று கூறினார்கள். அதாவது ஐயகோ! மலை போன்ற மனிதர் மரணித்து விட்டாரோ! என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள், இப்னு அவ்ஃப் இந்த உலகத்தை விட்டு சென்று விட்டார்கள். அன்னார் உலகத்தின் நீரூற்றிலிருந்து தூய்மையான நீரை அருந்தினார். மேலும் அசுத்தமான உலகத்தை விட்டு விட்டு சென்று விட்டார். இதனை வேறொரு வார்த்தையில் கூறுவதாக இருந்தால் இப்னு அவ்ஃப் அவர்கள், நல்ல காலகட்டத்தை வாழ்ந்தார். மேலும் தீய காலத்திற்கு முன்பாகவே உலகை விட்டு சென்று விட்டார்.

(குலாம் பாரி ஸைஃப் சாஹிப் எழுதிய ரோஷன் சிதாரே தொகுதி 2 பக்கம் 117)

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் தனது நினைவாக குடும்பத்தினர்களில் மூன்று மனைவிகளை விட்டுச் சென்றார்கள். அன்னாரின் சொத்தில் 1/8 ஒரு பங்காக ஒவ்வொரு மனைவிக்கும் 80000, 80000 திர்ஹம்கள் வழங்கப்பட்டன. ஆனால் மற்றொரு அறிவிப்பில் அன்னாருக்கு நான்கு மனைவிகள் என்றும் ஒவ்வொருவருக்கும் 80000 திர்ஹம்கள் பங்காக வழங்கப்பட்டதாகவும் வந்துள்ளது.

## திருக்குர்ஆனிலிருந்து...

மெய்யாகவே நாம் உங்களுக்கு முன் பல சமுதாயங்களை அவர்களிடம் அவர்களின் தூதர்கள் தெளிவான அடையாளங்களுடன் வந்திருந்தும் அவர்கள் அநீதி இழைத்தபோது அழித்து விட்டோம். மேலும் அவர்கள் நம்பிக்கை கொள்ளவில்லை. குற்றமிழைக்கும் மக்களுக்கு இவ்வாறே நாம் கூலியினைக் கொடுக்கின்றோம். (10:14)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 101 அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த நற்குறிப்பு இடம் பெறும் சஹாபியின் பெயர் ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் (ரலி) ஆவார்கள். ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் (ரலி) அவர்கள் அன்ஸார்களின் கோத்திரமான அவ்ஸின் கிளைக் கோத்திரம் பனூ அப்துல் அஷ்ஹலைச் சார்ந்தவராக இருந்தார்கள். மேலும் அன்னார் அவ்ஸ் கோத்திரத்தின் பெரும் தலைவராக இருந்தார்கள். அன்னாரின் தந்தை பெயர் மஆஸ் பின் நுஃமானாக இருந்தது. மேலும் தாயார் பெயர் கப்ஷா பின்த் ராஃபி ஆகும். அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெண் சஹாபியாவாகவும் இருந்தார்கள். ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களின் சுட்டுப் பெயர் அபூ அம்ர் ஆகும். ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) அவர்களின் மனைவியின் பெயர் ஹின்த் பின்த் சமாத் ஆகும். அன்னாரும் பெண் சஹாபியாவாக இருந்தார்கள்.

ஹஸ்ரத் ஹின்த் அவர்கள் மூலமாக ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களுக்கு அம்ர் மற்றும் அப்துல்லாஹ் என்ற பிள்ளைகள் பிறந்தன. ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஹுஸைன் பின் உஸைர் (ரலி) ஆகியோர் ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்களின் கரங்களில் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டார்கள். ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்கள் பைஅத்தே உக்பா மற்றும் சானிய்யாவில் பங்கு பெற்ற 70 சஹாபாக்களில் முதல் முதலில் மதீனா வந்தவர் ஆவார்கள். அன்னார் மதீனாவிற்கு அனுப்பப்பட்டிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கேற்ப அன்னார் மக்களை இஸ்லாத்தின் பக்கம் அழைத்தும், மக்களுக்கு திருக்குர்ஆனை கற்றுக் கொடுத்தும் வந்தார்கள்.

ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டபோது பனூ அப்துல் அஷ்ஹல் கோத்திரத்திடம் இவ்வாறு கூறினார்கள்: உங்களுடைய ஆண்களும் பெண்களும் இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளாத வரை எனக்கு உங்களுடன் உரையாடுவது ஹராம் ஆகும். எனவே அந்த கோத்திரத்தின் அனைத்து உறுப்பினர்களும் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டார்கள். அன்ஸார்களில் பனூ அப்துல் அஷ்ஹல் என்ற குடும்பத்தினரின் அனைத்து ஆண்களும், பெண்களும் முதல் முதலில் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டார்கள்.

முஸ்அப் பின் உமைர் மற்றும் அஸத் பின் ஸுராரா என்ற இரண்டு நபர்களை ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் (ரலி) அவர்கள் தனது வீட்டிற்கு அழைத்து வந்தார்கள். பின்னர் அவர்கள் இருவரும் ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களின் வீட்டிலேயே தங்கி மக்களை இஸ்லாத்தின் பக்கம் அழைத்து வந்தார்கள். ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் அஸத் பின் சுராரா இருவரும் சிற்றன்னை வழி சகோதரர்கள் ஆவார்கள். ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் உஸைது பின் ஹுலைர் (ரலி) ஆகியோர் பனூ அப்துல் அஷ்ஹலின் சிலைகளை உடைத்தார்கள். அவர்கள் இருவரும் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள். எனவே அந்த கோத்திரத்தினர் அனைவரும் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டுவிட்ட பிறகு அவர்களின் சிலைகளை உடைத்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சஅத் அவர்களை ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் அவர்களுடன் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். மற்றொரு அறிவிப்பின் அடிப்படையில், அன்னாரின் சகோதரத்துவ பந்தம் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜராஹ் அவர்களுடன் ஏற்படுத்தப்பட்டது.

(அல் அஸாபா ஃபீ தமீஸுல் சஹாபா தொகுதி 3 பக்கம் 70 சஅத் பின் முஆஸ் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 461 சஅத் பின் முஆஸ் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 320,321 சஅத் பின் முஆஸ் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட சம்பவம் தொடர்பான குறிப்பை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற புத்தகத்தில் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

பைஅத்தே உக்பாவிற்குப் பிறகு அந்த 12 புதிய முஸ்லிம்கள் மக்காவிலிருந்து புறப்பட்டபோது இவ்வாறு விண்ணப்பம் செய்தார்கள். அதாவது ஒர் இஸ்லாமிய முஅல்லிம் ஒருவரை எங்களுடன் அனுப்பி வையுங்கள். அவர் எங்களுடன் வந்து எங்களுக்கு மார்க்கத்தை கற்றுத் தரட்டும். மேலும் அவர் எங்களுக்கு இஸ்லாமிய போதனைகளையும் வழங்கட்டும். மேலும் இணை வைக்கும் எங்களது சகோதரர்களுக்கு இஸ்லாத்திற்கு வரும்படி தப்லீக் செய்யட்டும்.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அப்தே அப்தார் கோத்திரத்தைச் சார்ந்த மிகவும் நன்றியுணர்வுமிக்க இளைஞரான ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்களை அவர்களுடன் அனுப்பி வைத்தார்கள். இஸ்லாமிய முபல்லிக் அக்காலகட்டத்தில் காரி அல்லது முக்ரீ என்று அழைக்கப்பட்டு வந்தார். ஏனென்றால் அவர்களின் பணி பெரும்பாலும் திருக்குர்ஆனை ஓதிக்காட்டுவதாகவே இருந்தது. ஏனென்றால் இஸ்லாத்தின் பிரச்சாரத்திற்காக அதுவே சிறந்த வழிமுறையாக இருந்தது.

அந்த வகையில் முஸ்அப் அவர்களும் மதீனாவிற்கு முபல்லிக்காக சென்றபோது இதன் காரணமாக முக்ரீ என்ற பெயரால் பிரபல்யமாகி விட்டார்கள். முஸ்அப் பின் உமைர் மதீனா வந்தடைந்தபோது சஅத் பின் ஸுராரா அவர்களின் வீட்டில் தங்கினார்கள்.

அநேகமாக இந்த சம்பவத்தின் ஒரு பகுதியை முஸ்அப் பின் உமைர் அவர்களின் நற்குறிப்பிலும் நான் கூறியிருக்கின்றேன். இருந்தபோதிலும் இங்கும் அந்த குறிப்பு வருகின்றது.

அன்னார் மதீனாவில் முதல் முதலில் முஸ்லிமான அஸத் பின் ஸுராரா அவர்களின் வீட்டில் தங்கினார்கள். இந்த அஸத் பின் ஸுராரா மிகவும் கலப்பற்ற தன்மை கொண்டவராகவும், தாக்கம்மிகு

## திருக்குர்ஆனிலிருந்து…

இந்தக் குர்ஆன் அல்லாஹ் அல்லாத ஒருவரால் பொய்யாக இயற்றப்பட்டிருக்க முடியாது. மாறாக, இது தனக்கு முன்னுள்ள (இறைவசனத்)தை மெய்ப்பிக்கின்றது. மேலும் (இறை) வேதத்தின் விளக்கமாக உள்ளது. இது எல்லா உலகங்களின் இறைவனிடமிருந்துள்ளதென்பதில் எந்த சந்தேகத்திற்கும் இடமில்லை. (10:38)

A.Nasir Ahmad (மேலப்பாளையம்)

சமூகத்தில் பெரியவராகவும் இருந்தார்கள். அவருடைய வீட்டையே அன்னார் தனது தப்லீக்கின் தலைமையகமாக ஆக்கிக் கொண்டார்கள். தனது கடமையை நிறைவேற்றுவதில் அன்னார் எப்போதும் மும்முரமாக இருந்து வந்தார்கள். மேலும் மதீனாவில் முஸ்லிம்களுக்கு சமூக வாழ்க்கைக்கான சூழல் கிடைத்திருந்தது. மேலும் மக்காவை ஒப்பிடுகின்றபோது மதீனாவில் அமைதிகரமான வாழ்க்கையாகவும் இருந்தது. எனவே அசத் பின் ஸரார அவர்களின் ஆலோசனைக்கேற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜுமுஆ தொழுகையை நடத்தும்படி முஸ்அப் பின் உமைர் அவர்களுக்கு வழிகாட்டினார்கள்.

இவ்வாறு முஸ்லிம்களுக்கான சமூக வாழ்க்கை ஆரம்பமானது. பிறகு சிறிது காலத்திலேயே மதீனாவின் ஒவ்வொரு வீட்டிலும் இஸ்லாத்தைக் குறித்து பேசப்படும் வகையில் இறைவனும் அருள் செய்தான். மேலும் முறையாக தொடர்ந்து அங்கு ஜுமுஆ தொழுகையும் நடந்து வந்தது. இஸ்லாமும் பரவத் தொடங்கியது. மேலும் அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தினர் மிக வேகமாக முஸ்லிம்களாக ஆக தொடங்கினர். சில நிலைகளில் ஒரு கோத்திரத்தின் முழு மக்களும் ஒரே நாளில் முஸ்லிமாகி வந்தனர். அந்த வகையில் பனூ அப்துல் அஷ்ஹல் கோத்திரத்தினரும் அதேபோன்று ஒன்றாக முஸ்லிம்களாகி விட்டனர்.

இந்த கோத்திரமானது அன்ஸார்களின் மிக பிரபல்யமான அவ்ஸ் கோத்திரத்தின் தனிச்சிறப்புமிக்க அங்கமாக இருந்தது. அதன் தலைவரின் பெயர் சஅத் பின் மஆஸ் ஆகும். அன்னார் பனூ அப்துல் அஷ்ஹல் என்ற கோத்திரத்திற்கு மட்டும் மாபெரும் தலைவராக இருக்கவில்லை. மாறாக, முழு அவ்ஸ் கோத்திரத்தின் தலைவராகவும் இருந்தார்கள். மதீனாவில் இஸ்லாத்தை பற்றி பேசப்பட்டபோது அதனை சஅத் பின் மஆஸ் அவர்கள் விரும்பவில்லை. அன்னார் அதனை தடுக்க எண்ணினார்கள். அன்னார் அப்போது முஸ்லிமாக ஆகி இருக்கவில்லை. இஸ்லாம் மதீனாவில் வேகமாக பரவத் தொடங்கியபோது கோத்திரத்தின் பெரும் தலைவராக இருந்த சஅத் பின் மஆஸ் அவர்களுக்கு சற்று வெறுப்பு ஏற்பட்டது. ஆனால் அஸ்அத் பின் ஸரார அவர்களுடன் அன்னாருக்கு நெருங்கிய உறவு இருந்து வந்தது. அவர்கள் இருவரும் சிற்றன்னையின் சகோதரர்களாக இருந்தார்கள். மேலும் அஸத் அவர்களோ முஸ்லிம்களாக ஆகி இருந்தார்கள்.

எனவே சஅத் பின் மஆஸ் அவர்கள் இந்த விஷயத்தில் தான் நேரடியாக தலையிடுவதற்கு தயக்கம் கொண்டிருந்தார்கள். மேலும் ஏதாவது கசப்பான உணர்வு ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக அதிலிருந்து விலகி இருந்தார்கள். எனவே தனது மற்றொரு ஒரு உறவினராக உஸைது பின் அல் ஹுலைர் அவரிடம் அன்னார் இவ்வாறு கூறினார்கள்: அஸ்அத் பின் ஸரார அவர்களின் காரணமாக எனக்கு சிறிது தயக்கம் உள்ளது. ஆனால் நீங்கள் சென்று முஸ்அப் அவர்களை நமது குடும்பத்தினருக்கு மத்தியில் மார்க்கமற்ற தன்மையை பரப்புவதிலிருந்து தடுத்து நிறுத்துங்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவிற்கு அனுப்பி வைத்த முபல்லிக்கை மக்காவில் மார்க்கமற்ற தன்மையை பரப்புகின்ற வேலையிலிருந்து தடுத்து நிறுத்துங்கள். மேலும் அஸ்அத் அவர்களிடம் இது நல்ல வழிமுறையல்ல என்றும் கூறி விடுங்கள்.

உஸைது அவர்களோ பனூ அப்துல் அஷ்ஹலின் தனிச்சிறப்புக்க தலைவர்களில் ஒருவராக இருந்தார்கள். எந்த அளவுக்கு என்றால் அன்னாரின் தந்தையார் பஆஸ் போரின்போது முழு அவ்ஸ் கோத்திரத்திற்கும் தலைவராக இருந்தார்கள். பஆஸ் போரைப் பற்றி இதற்கு முன்பே கூறப்பட்டு விட்டது. அதாவது அந்தப் போர் இஸ்லாத்திற்கு முன்பாக அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் என்ற மதீனாவின் இரண்டு கோத்திரத்தினருக்கு இடையே நடைபெற்ற போராகும்.

எவ்வாறிருப்பினும் சஅத் பின் மஆஸ் அவர்களுக்குப் பிறகு உஸைது பின் ஹுலைர் அவர்கள் தனது கோத்திரத்தினதருக்கு மத்தியில் செல்வாக்கு பெற்றிருந்தார்கள். எனவே சஅத் அவர்கள் கூறியதற்கேற்ப அன்னார் முஸ்அப் பின் உமைர் மற்றும் அஸ்அத் பின் ஸரார ஆகியோரிடம் சென்றார்கள். முஸ்அப் அவர்களிடம், மிகவும் கோபத்துடன் நீங்கள் எங்களது ஆட்களை மார்க்கமற்றவர்களாக ஆக்கிக் கொண்டிருக்கின்றீர்கள். அதிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். இல்லையென்றால் நல்லதாக இருக்காது என்று கூறினார்கள்.

முஸ்அப் அவர்கள் அதற்கு பதில் கூறுவதற்கு முன்பாக அஸ்அத் அவர்கள், மிகவும் மெதுவாக முஸ்அப் அவர்களிடம் இவ்வாறு கூறினார்கள்: இவர் தனது கோத்திரத்தின் பெரும் செல்வாக்கு மிகுந்த ஒரு தலைவர் ஆவார். அவரிடம் மிகுந்த மென்மையுடனும், அன்புடனும் பேசுங்கள்.

எனவே முஸ்அப் அவர்கள் மிகுந்த மரியாதையுடனும், அன்புடனும் உஸைத் அவர்களிடம், நீங்கள் கோப்படாதீர்கள். மாறாக, தயவுகூர்ந்து சிறிது நேரம் அமருங்கள். தனிந்த மனதுடன் எங்களது கூற்றுக்களை கேளுங்கள். அதன் பிறகு நீங்கள் ஒரு முடிவிற்கு வாருங்கள் என்று கூறினார்கள்.

உஸைது அவர்களுக்கு இந்த கூற்று சரியானதாக தென்பட்டது. எனவே அமர்ந்து விட்டார்கள். மேலும் முஸ்அப் அவர்களுக்கு திருக்குர்ஆனை ஓதிக் காட்டினார்கள். மேலும் மிக பேரன்புடன் அவர்களுக்கு இஸ்லாத்தின் போதனைகளை எடுத்துரைத்தார்கள். அது எந்த அளவுக்கு அன்னாரின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால் அதனால் அன்னார் அங்கேயே முஸ்லிமாகி விட்டார்கள்.

மேலும் கூறினார்கள்: எனக்குப் பின்னால் ஒரு நபர் இருக்கின்றார். அவர் எப்படிப்பட்டவர் என்றால் ஒருவேளை அவர் ஈமான் கொண்டு விட்டால் அந்நிலையில் எமது முழு கோத்திரமும் முஸ்லிமாகிவிடும். அவர்தான் என்னை இங்கு அனுப்பி வைத்தார். நீங்கள் சிறிது காத்திருங்கள். நான் அவரை இங்கு அனுப்பி வைக்கின்றேன்.

இவ்வாறு கூறி அன்னார் எழுந்து சென்று விட்டார்கள். மேலும் ஏதோ சாக்குப்போக்கு கூறி சஅத் பின் மஆஸ் அவர்களை முஸ்அப் பின் உமைர் மற்றும் அஸ்அத் பின் ஸரார அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள். சஅத் பின் மஆஸ் அவர்களும் வந்தார்கள். மிகவும் கோபத்துடன் அஸ்அத் பின் ஸரார அவர்களிடம், அஸ்அதே! பாரும். நீர் உறவினராக இருப்பதன் மூலம் ஆகுமற்ற பயனை அடைந்து வருகின்றீர். உமக்கு எம்முடன் உறவு இருக்கின்றது. எனவே நீர் அதிலிருந்து ஆகுமற்ற பயனை பெற்று வருகின்றீர். இது நல்லதல்ல என்று கூறினார்கள்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

அல்லாஹ்வுக்கு எதிராகப் பொய்யை இட்டுக்கட்டுபவனை விடவும் அல்லது அவன் அடையாளங்களைப் பொய்யாக்குபவனை விடவும் பெரும் அநீதியிழைப்பவன் எவன்? நிச்சயமாக குற்றவாளிகள் ஒருபோதும் வெற்றி பெறுவதில்லை. (10:18)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

அப்போது முஸ்அப் அவர்கள், ஏற்கனவே நடந்ததுபோன்று மென்மையுடனும், அன்புடனும் அவரின் கோபத்தையும் தணித்தார்கள். ஹஸ்ரத் முஸ்அப் அவர்கள், மக்காவிலிருந்து வந்திருந்த முபல்லிக் ஆவார்கள். மிக அன்புடன் அவர்களுடன் பேசினார்கள்.

ஆக நீங்கள் சிறிது நேரம் அமர்ந்து எனது கூற்றுக்களை கேளுங்கள். அதன் பிறகு அதில் ஏதாவது உங்களுக்கு ஆட்சேபணை இருக்குமென்றால் நீங்கள் அதனை விளக்குங்கள் என்று முஸ்அப் அவர்கள் கூறினார்கள்.

அதற்கு சஅத் அவர்கள், ஆம்! இது சரியான விண்ணப்பம்தான் என்று கூறி தனது ஈட்டியை வைத்துவிட்டு அமர்ந்து விட்டார்கள். அன்னாரின் கரத்தில் ஈட்டி இருந்தது. அவர்களில் பெரும்பாலார் கைகளில் ஆயுதங்களுடன் சுற்றித் திரிந்து வந்தனர். முஸ்அப் அவர்கள் அதேபோன்று முதலில் திருக்குர்ஆனை ஓதிக் காட்டினார்கள். பின்னர் மனதைக் கவரும் வகையில் இஸ்லாமிய போதனைகளை விளக்கினார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: அப்போது சிறிது நேரம் கூட கழிந்திருக்கவில்லை. சஅத் அவர்களின் உள்ளமும் இளகியது. அவர் மீதும் இஸ்லாமிய போதனையின் தாக்கம் ஏற்பட்டு விட்டது. எனவே சஅத் அவர்கள் உரிய வழிமுறைக்கேற்ப குளித்துவிட்டு வந்து கலிமா ஷஹாதத் கூறினார்கள். அதன் பிறகு சஅத் அவர்களும் உஸைது பின் ஹுலைர் அவர்களும் இணைந்து தனது கோத்திரத்தினரிடம் சென்றனர். மேலும் சஅத் அவர்கள் அவர்களிடம் சிறப்பான அரபிகளின் வழக்கத்திற்கேற்ப இவ்வாறு கேட்டார்கள். மேலும் தனது கோத்திரத்தினரிடம், பனீ அப்துல் அஷ்ஹலே! என்னைப் பற்றி உங்களது எண்ணம் என்ன? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் அனைவரும் ஒருமித்த குரலில், தாங்கள் எங்களுடைய தலைவரும், தலைவரின் மகனும் ஆவீர்கள். உங்களது கூற்றின் மீது எங்களுக்கு முழு நம்பிக்கை உள்ளது என்று கூறினார்கள்.

அதற்கு சஅத் அவர்கள், அப்படியென்றால் நீங்கள் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் மீது நம்பிக்கை கொள்ளாதவரை உங்களுடன் எனக்கு எந்த தொடர்பும் இல்லை என்று கூறினார்கள். மேலும் அப்போதே தப்லீக் செய்யவும் தொடங்கினார்கள். அதன் பிறகு சஅத் அவர்கள் அவர்களுக்கு இஸ்லாத்தின் போதனைகளை புரிய வைத்தார்கள். அதாவது தனது கோத்திரத்தினருக்கு இஸ்லாத்தின் போதனைகளை புரிய வைத்து எடுத்துரைத்தார்கள்.

அறிவிப்பில் வருகின்றது. அந்த நாளின் மாலைப்பொழுது வருவதற்குள் அதாவது பகல் பொழுது முடிவதற்குள் முழு கோத்திரமும் முஸ்லிமாகி விட்டது. சஅத் மற்றும் உஸைது ஆகிய இருவரும் தமது கரங்களால் தமது சமுதாயத்தின் சிலையை உடைத்தெறிந்தார்கள். அந்த நாளில் முஸ்லிமான சஅத் பின் மஆஸ் மற்றும் உஸைது பின் ஹுலைர் ஆகி இருவரும் அன்ஸார்களில் மாபெரும் சஹாபாக்களாக திகழ்ந்தார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:

சந்தேகத்திற்கிடமின்றி அவர்கள் பெரும் அந்தஸ்தையும் பெற்றிருந்தார்கள். குறிப்பாக மக்காத்து முஹாஜிரீன்களுக்கு இடையில் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களுக்கு கிடைத்திருந்த அந்தஸ்து சஅத் பின் மஆஸ் அவர்களுக்கு மதீனத்து அன்ஸார்களுக்கு மத்தியில் கிடைத்திருந்தது. இந்த இளைஞர் மிகவும் உயர் தரமான கலப்பற்ற தன்மை கொண்டவராகவும், மிகவும் பற்றுமிக்கவராகவும், இஸ்லாம் மற்றும் இஸ்லாத்தின் தோற்றுநர் மீது தனது உயிரையே அர்ப்பணம் செய்யும் அளவிற்கு நேசம் கொண்டவராகவும் திகழ்ந்தார். அவர் தனது கோத்திரத்தின் மாபெரும் தலைவராக இருந்தார். மேலும் மிகவும் புத்திசாலியாகவும் இருந்தார். இஸ்லாத்தில் சிறப்புமிக்க சஹாபாக்களுக்கு கிடைத்திருந்த அந்தஸ்து அவருக்கும் கிடைத்துள்ளது.

சந்தேகத்திற்கிடமின்றி அவரது இளம் வயது மரணத்தின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இவ்வாறு கூறப்பட்டது. சஅத் அவர்களின் மரணத்தினால் ரஹ்மானாகிய இறைவனின் அரியணை அசைந்தது. அது ஓர் ஆழமான உண்மையை உள்ளடக்கி இருந்தது. அன்னார் இளம் வயதிலேயே மரணித்து விட்டார்கள்.

சுருக்கமாக, இவ்வாறு அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்திற்கு மத்தியில் இஸ்லாம் வேகமாக பரவிக் கொண்டு சென்றது. யூதர்கள் அச்சம் நிறைந்த கண்களுடன் இக்காட்சிகளை கண்டு வந்தனர். மேலும்இனி என்ன நிகழும் என்பதை இறைவனே நன்கறிவான் என்று தங்களது மனதிற்குள்ளேயே அவர்கள் கூறி வந்தனர்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 224–227)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் மற்றொரு இடத்தில் சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற தனது புத்தகத்தில் எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வருகை தந்து அதிக காலம் கழிந்திருக்கவில்லை. அதற்குள் மக்கத்து குரைஷிகளிடமிருந்து கஸ்ரஜ் கோத்திரத்தின் தலைவரான அப்துல்லாஹ் பின் அபீ பின் சுலூலுக்கும் மற்றும் அவருடைய ஏனைய நண்பர்களின் பெயரிலும் மக்கத்துவாசிகள் சார்பாக ஒரு பகிரங்க கடிதம் அனுப்பப்பட்டது. அதாவது நீங்கள் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு அடைக்கலம் வழங்குவதிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். இல்லையென்றால் அது உங்களுக்கு நல்லதல்ல என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

அந்த கடிதத்தின் சொற்கள் இவ்வாறு இருந்தன. நீங்கள் எமது நபருக்கு அதாவது முஹம்மது (ஸல்) அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்துள்ளீர்கள். மேலும் நாங்கள் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றோம். ஒன்று நீங்கள் அவரிடமிருந்து விலகிக் கொள்ளுங்கள். அவருக்கு எதிராக போரிடுங்கள். அல்லது குறைந்தபட்சம் உங்களது நகரத்திலிருந்து அவரை வெளியேற்றி விடுங்கள். இல்லையென்றால் நாங்கள் எங்களது முழு படையுடன் வந்து உங்கள் மீது தாக்குதல் தொடுத்து விடுவோம். மேலும் உங்களது அனைத்து ஆண்களையும் கொன்று குவித்து உங்கள் பெண்களை அபகரித்துக் கொள்வதை எங்களுக்கு ஆகுமானதாக ஆக்கிக் கொள்வோம்.

மதீனாவில் இந்த கடிதம் வந்தடைந்ததும் ஏற்கனவே தமது உள்ளத்தில் இஸ்லாத்திற்கெதிராக கடும் பகைமை கொண்டிருந்த அப்துல்லாஹ் மற்றும் அவரது தோழர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் இஸ்லாத்திற்கெதிராக இன்னும் பகைமை அதிகரிக்கச் செய்தது. அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கெதிராக போர் செய்வதற்கு ஆயத்தமாகி விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த தகவல் கிடைத்தவுடன் அன்னார் உடனே அந்த நபர்களை சென்று சந்தித்தார்கள். மேலும் அவர்களுக்கு புரிய வைத்தார்கள்.

அப்துல்லாஹ் பின் அபீ பின் சுலூல் மற்றும் அவரது தோழர்களிடம், என்னுடன் போர் புரிவது உங்களுக்கே பாதிப்பை ஏற்படுத்தும். ஏனென்றால் உங்களின் சகோதரர்களே உங்களுக்கு எதிராக நிற்பார்கள். உங்களது கோத்திரத்தையும், உங்களது

நகரத்தையும் சார்ந்த மக்கள்தான் முஸ்லிமாக ஆகி இருக்கின்றார்கள். நீங்கள் போர் புரிந்தால் இதே மக்கள்தான் என் சார்பாக உங்களுக்கு எதிராக போர் புரிவார்கள். அதாவது அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தின் முஸ்லிம்கள் எல்லா நிலையிலும் என்னுடன்தான் இருப்பார்கள் என்று கூறினார்கள்.

பின்னர் அன்னார் கூறினார்கள்: எனவே என்னுடன் போர் புரிவது என்பதன் பொருள் என்னவென்றால், நீங்கள் உங்களது பிள்ளைகள் மற்றும் சகோதரர்கள் மற்றும் தந்தையர்களுக்கெதிராகவே வாள் ஏந்துவீர்கள். எனவே இது சரிதானா? என்று நீங்களே சிந்தித்துக் கொள்ளுங்கள்.

அப்துல்லாஹ் மற்றும் அவரது தோழர்களின் உள்ளங்களில் பஆஸ் போரினால் ஏற்பட்ட அழிவின் நினைவு எஞ்சியிருந்தது. அவர்கள் அந்த போரினால் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். அதனால் ஒரு பெரும் அழிவு ஏற்பட்டிருந்தது. எனவே இனி நாம் மீண்டும் நமக்குள்ளேயே சண்டையிட நேரிடும் என்பதை உணர்ந்து கொண்டார்கள். எனவே அந்த எண்ணத்திலிருந்து விலகி விட்டார்கள்.

குரைஷிகளுக்கு இந்த திட்டத்தில் தோல்வி ஏற்பட்டபோது சிறிது காலம் கழித்து இதேபோன்ற ஒரு கடிதத்தை மதீனத்து யூதர்களின் பெயரில் அனுப்பி வைத்தார்கள். உண்மையில் மக்கத்து காஃபிர்களின் எண்ணம் என்னவாக இருந்ததென்றால், எப்படியாவது இஸ்லாத்தின் பெயரையும், அடையாளத்தையும் உலகிலிருந்தே அழித்து விட வேண்டும். அவர்களின் அநீதிகளினால் தொல்லைகளுக்கு ஆளாகி முஸ்லிம்கள் முதலில் அபிஸீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்திருந்தார்கள். காஃபிர்கள் அவர்களை அங்கேயும் பின்தொடர்ந்து சென்றார்கள். முதல் நாளிலிருந்தே அவர்கள் எப்போதும் இஸ்லாத்தை அழிப்பதற்காக முயற்சி செய்து வந்தார்கள்.

எனவே மக்காவிருந்து நாட்டைத்துறந்து சென்ற அநீதியிழைக்கப்பட்ட அந்த ஏழைகளை நல்லுள்ளம் படைத்த அபிஸீனிய மன்ன மக்கத்துவாசிகளிடம் திருப்பி ஒப்படைத்து விட வேண்டும் என்ற முயற்சியில் தனது பெரும் ஆற்றலை அவர்கள் செலவிட்டுக் கொண்டிருந்தார்கள்.

பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து மதீனா சென்றபோது அன்னாரை கைது செய்கின்ற முயற்சியில் மக்கத்து குரைஷிகள் எந்த குறையையும் வைக்கவில்லை. முழு முயற்சியாக செயல்பட்டனர். ஒவ்வொரு சந்தர்ப்பத்தின்போது இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை எப்படியாவது ஒழித்து விட வேண்டும் என முயற்சி செய்தனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் அன்னாருடைய சஹாபாக்கள் மதீனாவிற்கு சென்று விட்டனர் என்றும் அங்கு இஸ்லாம் வேகமாக பரவி வருகின்றது என்ற தகவலும் மக்கத்து குரைஷிகளுக்கு கிடைத்தவுடன் அவர்கள் மதீனாவாசிகளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் போர் செய்து இஸ்லாத்தை அழித்து விட வேண்டும் அல்லது அன்னாருக்கு அடைக்கலம் கொடுப்பதிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும். மேலும் அன்னாரை மதீனாவிலிருந்து வெளியேற்றி விட வேண்டும் என்று பகிரங்க கடிதம் ஒன்றை அனுப்பினார்கள்.

காஃபிர்களின் அந்த கடிதத்திலிருந்து அரபிகளின் இந்த நடைமுறை அதாவது அவர்கள் போரின்போது தனது எதிரிகளுடன் போர் புரிந்து அவர்களின் ஆண்கள் அனைவரையும் கொலை செய்து, அவர்களின் பெண்களை அபகரித்துக் கொள்கின்ற நடைமுறை இருந்து வந்தது என்பது அந்த கடிதத்திலிருந்து நமக்கு தெரிய வருவதாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் தமது அந்த புத்தகத்தில் எழுதுகின்றார்கள்.

மேலும் முஸ்லிம்களைப் பற்றி அவர்களிடம் இருந்த அபாயகரமான எண்ணமும் வெளிப்படுகின்றன என்றும் கூறுகின்றார்கள். அதாவது முஸ்லிம்களுக்கு அடைக்கலம் கொடுக்கின்றவர்களுக்கு அவர்கள் இந்த அளவுக்கு தண்டனை கொடுக்கத் தயாராக இருந்தார்கள். அதாவது அவர்களின் ஆண்களைக் கொன்று பெண்களை தங்களுக்கு ஆகுமானவர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்பதே அவர்களின் எண்ணமாக இருந்தது. அப்படியென்றால் நிச்சயமாக முஸ்லிம்களுக்கெதிராக மிகக்கடுமையான திட்டம் கொண்டவர்களாக அவர்கள் இருந்தனர்.

எவ்வாறிருப்பினும் மக்கத்து குரைஷிகளின் இந்த கடிதம் என்பது ஒரு தற்காலிக உணர்வின் விளைவாக இருந்ததில்லை. மாறாக, அது அவர்களின் நிரந்தர எண்ணமாக இருந்தது. மேலும் முஸ்லிம்களை அமைதியாக இருக்க விடக்கூடாது. மேலும் இஸ்லாத்தை உலகிலிருந்து அழித்து விட வேண்டும் என்று காஃபிர்கள் உறுதி பூண்டிருந்தார்கள்.

அந்த வகையில் ஒரு சம்பவத்தை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் தமது புத்தகத்தில் குறிப்பிடுகின்றார்கள். அந்த வரலாற்று சம்பவத்தை அன்னார் இவ்வாறு எழுதுகின்றார்கள்.

மக்கத்துவாசிகளின் கொலைகார எண்ணம் இதிலிருந்து வெளிப்படுகின்றது. அதனுடைய சம்பவம் குறித்து புகாரியிலும் அறிவிப்பு வருகின்றது. ஹிஜ்ரத்திற்கு சில காலம் கழித்து அவ்ஸ் கோத்திரத்தின் மாபெரும் தலைவரான சஅத் பின் மஆஸ் அவர்கள் முஸ்லிமாகி விட்டார்கள். அன்னார் உம்ரா செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் மக்கா சென்றிருந்தார்கள். மேலும் இஸ்லாத்திற்கு முந்தைய காலகட்டத்தின் அதாவது அறிவீனமான காலகட்டத்தின் பழைய தோழரான உமைய்யா பின் ஹல்ஃப் அவருடைய வீட்டில் சென்று தங்கினார்கள். அவன் மக்கத்து தலைவர்களின் ஒரு தலைவனாக இருந்தான்.

ஹஸ்ரத் மஆஸ் அவர்கள், நான் தனியாக தவாஃப் செய்ய சென்றால் மக்கத்துவாசிகள் தமக்கு நிச்சயம் தொல்லை தருவார்கள் என்பதை அன்னார் நன்கு அறிந்திருந்தார்கள். எனவே குழப்பத்திலிருந்து விலகி இருப்பதற்காக உமைய்யாவிடம், நான் கஃபத்துல்லாஹ்வை தவாஃப் செய்ய விரும்புகின்றேன். நீ என்னுடன் வர வேண்டும். மேலும் யாரும் இல்லாத நேரத்தில் தனிமையில் பாதுகாப்பாக நான் தவாஃப் செய்து விட்டு மக்காவை விட்டு புறப்பட்டு எனது நாட்டிற்கு நான் திரும்பி விட வேண்டும் என்று அவனிடம் கூறினார்கள்.

எனவே உமைய்யா பின் ஹல்ஃப் மக்கத்துவாசிகள் பெரும்பாலும் வீட்டிலேயே இருக்கின்ற மதிய வேளையில் சஅத் அவர்களை அழைத்துக் கொண்டு கஃபத்துல்லாஹ்விற்கு சென்றடைந்தான். ஆனால் தற்செயலாக அங்கு நடந்தது என்னவென்றால், அதே நேரம் அபூஜஹிலும் அங்கு வந்தடைந்தான். சஅத் அவர்களின் மீது அவனது பார்வை பட்டதும் அவனது கண்கள் கோபத்தால் சிவந்தன. ஆனால் அவன் தனது கோபத்தை

Love for All Hatred for None
எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

அடக்கிக் கொண்டு உமைய்யாவை நோக்கி, அபூ சஃப்ஃபானே! உம்முடன் இருக்கின்ற அந்த நபர் யார்? என்று கேட்டான். அதற்கு உமைய்யா, இவர் அவ்ஸ் கோத்திரத்தின் தலைவரான சஅத் பின் மஆஸ் ஆவார் என்று கூறினான்.

அப்போது அபூஜஹில், மிகவும் கொந்தளித்து சஅதை நோக்கி இவ்வாறு கூறினான்: நீங்கள் நபூதுபில்லாஹ் முர்தத் ஆன இந்த முஹம்மது (ஸல்) அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்துக் கொண்டு கஃபத்துல்லாஹ்வை பாதுகாப்புடன் தவாஃப் செய்துவிட முடியும் என்று நினைக்கின்றீர்களா? மேலும் நீங்கள் அந்த நபரைப் பாதுகாத்து அவருக்கு உதவி செய்கின்ற ஆற்றல் பெற்றிருப்பதாக எண்ணம் கொண்டிருக்கின்றீர்களா? இறைவன் மீது ஆணையாக! இப்போது உம்முடன் அபூ சுஃப்ஃபான் இல்லையென்றால், நீர் இங்கிருந்து தப்பித்து உமது குடும்பத்தினரிடம் செல்ல முடியாது என்று கூறினான்.

சஅத் பின் மஆஸ் குழப்பத்திலிருந்து விலகியிருக்கவே விரும்பினார்கள். ஆயினும் அவர்களின் நரம்புகளிலும் கம்பீரத்தின் இரத்தம் ஓடிக் கொண்டிருந்தது. உள்ளத்தில் ஈமானிய ரோஷம் பொங்கியிருந்தது. எனவே உடனடியாக, அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீர் எம்மை கஃபாவிலிருந்து தடுத்து நிறுத்தினால் நினைவிற் கொள்ளும். பின்னர் சிரியா சென்றடைய வழிப்பாதையில் உமக்கு பாதுகாப்பு கிடைக்காது. நாங்களும் உமது வழிப்பாதையில் அமர்ந்து விடுவோம். உங்களுக்கு எதிராக நாங்களும் நிறைய செய்வோம் என்று கூறினார்கள்.

உமைய்யா இந்த விஷயத்தை கேட்டதும் சஅதின் கோபத்தைக் கண்டதும், சஅதே! அபுல் ஹகம் மக்கத்துவாசிகளின் தலைவராவார். அவருக்கு எதிராக நீர் இப்படி உரத்த குரலில் பேசாதீர் என்று கூறினான். இந்த அபுல் ஹகம் என்ற பெயரால் அபூஜஹிலை மக்கத்துவாசிகள் அழைத்து வந்தனர். அவன் மக்கத்து நகரத்தின் தலைவனாக இருந்தான்.

அதற்கு கோபத்திலிருந்த சஅத் அவர்களும் உமைய்யாவிடம் இவ்வாறு பதிலளித்தார்கள். உமைய்யாவே! நீர் இந்த பேச்சிலிருந்து விலகி விடும். அல்லாஹ்வின் மீது ஆணையாக! எனக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த முன்னறிவிப்பு மறக்கவில்லை. நீர் ஒரு நாள் முஸ்லிம்களின் கரங்களால் கொல்லப்படுவீர். அதாவது உமைய்யா முஸ்லிம்களின் கரங்களால் கொல்லப்படுவார் என்பதே அந்த முன்னறிப்பாகும்.

இதைக்கேட்ட உமைய்யா பின் ஹல்ஃப் மிகவும் பயந்து போனான். மேலும் வீட்டில் சென்று அவன் தனது மனைவிடம் சஅதின் இந்த விஷயத்தை கூறினான். இறைவன் மீது ஆணையாக! இனி நான் முஸ்லிம்களுக்கு எதிராக மக்காவிலிருந்து செல்ல மாட்டேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றின் மீது அவனுக்கு இந்த அளவுக்கு நம்பிக்கை இருந்தது. எப்போதும் அன்னாரின் கூற்று முழுமையடைந்து வந்துள்ளது. எனவே என்னைப் பற்றிய இந்த கூற்றும் முழுமை பெறும் என்று அவன் நம்பினான். ஆனால் இறை நியதியின் திட்டம் நிறைவேற வேண்டியதிருந்தது. பத்ர் சந்தர்ப்பத்தில் உமைய்யா வலுக்கட்டாயமாக மக்காவிலிருந்து புறப்பட நேரிட்டது. அவன் முஸ்லிம்களின் கரங்களால் கொலை செய்யப்பட்டு தனது தீய முடிவை அடைந்தான். இந்த உமைய்யா யார் என்றால் அவன்தான் ஹஸ்ரத் பிலால் அவர்கள் மீது இஸ்லாத்தின் காரணமாக மிகக் கடுமையான அநீதிகளை இழைத்து வந்தான்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 280–282)

சஹீஹ் புகாரியின் ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் அவர்கள் உம்ரா செய்யும் எண்ணத்துடன் சென்றார்கள். அன்னார் உமைய்யா பின் ஹல்ஃப் அதாவது அபு சுஃப்ஃபானிடம் தங்கினார்கள். முந்தைய கால தொடர்பு இருந்தது. உமைய்யா ஹஸ்ரத் சஅத் அவர்களிடம் மதீனா வரும்போது தங்குவதுண்டு. எனவே அன்னார் உம்ராவிற்காக எண்ணம் கொண்டபோது உமைய்யாவின் வீட்டில் தங்கி பாதுகாப்புடன் உம்ரா செய்யலாம் என்று எண்ணினார்கள்.

உமைய்யாவின் ஒரு வழக்கம் என்னவாக இருந்ததென்றால், அவன் சிரியாவிற்கு செல்லும்போதெல்லாம் மதீனாவின் வழியாகவே செல்வான். அப்போது ஹஸ்ரத் சஅத் அவர்களிடம் வந்து தங்குவான்.

உமைய்யா ஹஸ்ரத் சஅத் அவர்களிடம் கூறினான்: நான் உம்ரா செய்ய வேண்டுமென்று நீர் கூறுகின்றீர். எனவே சிறிது நேரம் நீங்கள் காத்திருங்கள். மதிய வேளையில் மக்கள் அயர்ந்து விடும்போது கஃபத்துல்லாஹ் சென்று தவாஃப் செய்யலாம்.

அறிவிப்பாளர் அறிவிக்கின்றார்: ஹஸ்ரத் சஅத் அவர்கள் அதன் அடிப்படையில் தவாஃப் செய்து கொண்டிருந்தார்கள். அந்த நேரம் அபூஜஹிலை அன்னார் கண்டார்கள். கஃபதுல்லாஹ்வை தவாஃப் செய்து கொண்டிருக்கின்ற இவர் யார் என்று அபூஜஹில் கேட்டான். அதற்கு ஹஸ்ரத் சஅத் அவர்கள், நான் சஅத் ஆவேன் என்று அன்னார் சுயமே பதிலளித்து விட்டார்கள். அதற்கு அபூஜஹில், நீர் எப்படி நிம்மதியாக கஃபத்துல்லாஹ்வை தவாஃப் செய்ய முடியும்? ஏனெனில் நீங்கள் முஹம்மது (ஸல்) மற்றும் அவரது தோழர்களுக்கு அடைக்கலம் வழங்கியுள்ளீர்கள் என்று கூறினான். அதற்கு சஅத் அவர்கள், ஆம் என்று கூறினார்கள்.

அப்போது அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் ஏசிப்பேசியதாக அறிவிப்பாளர் அறிவிக்கின்றார். உமைய்யா ஹஸ்ரத் சஅத் அவர்களிடம், அபுல் ஹகமிற்கு எதிராக நீர் உமது குரலை உயர்த்தாதீர்கள் என்று கூறி அன்னாரை தடுக்க முற்பட்டான். ஹஸ்ரத் சஅத் அவர்களுக்கு மிகவும் கோபம் வந்தது. நீர் எம்மை இந்த கூற்றிலிருந்து விலகி விடும். நானும் அபூஜஹிலும் பேசிக் கொண்டிருக்கின்றோம். எங்களை பேச விடும். நீர் விலகி விடும் என்று அன்னார் கூறினார்கள்.

மேலும் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் உம்மைக் குறித்து இவ்வாறு கூற கேட்டுள்ளேன் என்றும் அன்னார் கூறினார்கள். அதாவது உமைய்யாவாகிய உம்மை இவனே அதாவது அபூஜஹிலே கொலை செய்யக் கூடியவனாக இருப்பான். அதாவது நீர் கொலை செய்யப்படுதற்கு காரணியாக அபூஜஹில் இருப்பான். அதற்கு உமைய்யா, என்னையா? என்று கேட்டான். அதற்கு சஅத் அவர்கள், ஆம் என்று கூறினார்கள். இதைக்கேட்ட உமைய்யா, அல்லாஹ்வின் மீது ஆணையாக! முஹம்மது (ஸல்) அவர்கள் பொய் பேசியதில்லை என்று கூறினான்.

இறுதியில் அவன் தனது மனைவியிடம் திரும்பி வந்து, எனது மதீனத்து நண்பர் கூறியது உமக்கு தெரியுமா? என்று கேட்டான்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

அல்லாஹ் அமைதி இல்லத்திற்கு அழைக்கின்றான். மேலும் தான் விரும்புபவரை நேரான வழியில் நடத்திச் செல்கிறான். (10:26)

A.Shamsul Alam காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

அதற்கு அவரது மனைவி அவர் என்ன கூறினார் என்று கூறினார். அதற்கு உமைய்யா, அபூஜஹில்தான் என்னை கொலை செய்பவனாக இருப்பான் என்று முஹம்மது (ஸல்) அவர்கள் கூறியதாக கேட்டதாக கூறுகின்றார். அதற்கு அவளது மனைவி, அல்லாஹ்வின் மீது ஆணையாக! முஹம்மது (ஸல்) அவர்கள் பொய்யான விஷயங்களை பேசுவதில்லை என்று கூறினாள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் அவர்கள் கூறுகின்றார்கள்: உமைய்யா பத்ர் மைதானத்தி நோக்கி புறப்பட்டான். உதவி தேடியவாறு முறையிட்டுக் கொண்டிருந்தான். உமைய்யாவின் மனைவி அவனிடம் கூறினாள். உமக்கு உமது மதீனத்து சகோதரனின் கூற்று நினைவில் இல்லையா? என்று கேட்டாள். நீர் செல்கின்றீர். ஆனால் அவரது கூற்றை நினைவில் வைத்துக் கொண்டு செல்லும் என்று கூறினாள்.

உமைய்யா மக்காவை விட்டு புறப்பட விரும்பவில்லை. ஆனால் அபுஜஹில் உம்மைய்யாவிடம், நீர் மக்காவின் தலைவர்களில் ஒருவர் ஆவீர். நீர் ஓரிரு நாளாவது எங்களுடன் வாரும் என்று கூறி அழைத்துச் சென்றான். எனவே உமைய்யாவும் அவனுடன் ஓரிரு நாட்களுக்காக சென்றான். மேலும் அல்லாஹ் அவனை கொலை செய்து விட்டான்.

(சஹீஹ் புகாரி, கிதாபுல் மனாகிப்.... ஹதீஸ் எண் 3632)

மற்றொரு அறிவிப்பில் உமைய்யா பின் ஹல்ஃப் பத்ர் போரில் பங்கு பெறுவது மற்றும் கொல்லப்படுவது தொடர்பாக இவ்வாறு வந்துள்ளது.

ஹஸ்ரத் சஅத் அவர்கள் கூறினார்கள்: உமைய்யாவே! இறைவன் மீது ஆணையாக! நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறக் கேட்டேன். அவர்கள் அதாவது சஹாபாக்கள் உம்மை கொன்று விடுவார்கள். அதற்கு மக்காவிலா? என்று உமைய்யா கேட்டான். அதற்கு சஅத் அவர்கள், அது எனக்குத் தெரியாது என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் சஅத் அவர்களின் இந்த கூற்றை கேட்டு உமைய்யா மிகவும் அஞ்சினான். உமைய்யா தனது வீட்டிற்கு சென்றான். மேலும் தனது மனைவியான சஃப்யா அல்லது கரீமாவிடம் கூறினான். உம்மே சஃப்ஃபானே! நீ என்னைப் பற்றி சஅத் கூறிய விஷயத்தை கேட்டாயா? என்று கூறினான். அதற்கு அவள், சஅத் என்ன கூறினார்? என்று கூறினாள். அப்போது உமைய்யா, என்னை முஸ்லிம்கள் கொன்று விடுவார்கள் என்று முஹம்மது (ஸல்) அவர்கள் கூறக் கேட்டதாக சஅத் அவர்கள் கூறியதாக கூறினான். அதற்கு நான் மக்காவிலா கொல்லப்படுவேன் என்று கேட்டேன். அதற்கு அவர் எனக்கு அது பற்றி தெரியாது என்று கூறி விட்டார்.

தொடர்ந்து உமைய்யா கூறினான்: இறைவன் மீது ஆணையாக! நான் மக்காவை விட்டு வெளியே செல்ல மாட்டேன்.

இந்த அளவுக்கு அவன் அச்சத்திற்கு ஆளானான். பத்ர் போர் நடைபெற்ற போது அபூஜஹில் போருக்காக புறப்பட்டான். மேலும் உமைய்யாவை, நீர் உமது வணிகக் குழுவை பாதுகாப்பதற்காக வாரும் என்று அழைத்தான். உமைய்யா செல்வதற்கு விரும்பவில்லை. அபூஜஹில் உமைய்யாவிடம் வந்தான். அவன் மறுத்தபோது அபூஜஹில் தான் நேரில் வந்து கூறினான். அபூ சுஃப்ஃபான், நீர் பின்தங்கி விட்டால் மக்கள் உம்மை பார்ப்பார்கள். நீர் மக்கத்து தலைவர்களில் ஒருவர் ஆவீர். நீர் பின்தங்கி விட்டால் மக்களும் பின்தங்கி விடுவார்கள் என்று கூறி அவனுக்கு அபூஜஹில் புரிய வைத்தான்.

இறுதியில் உமைய்யா கூறினான். இறைவன் மீது ஆணையாக! நீர் என்னை வலுக்கட்டாயமாக அழைப்பதால் நான் மிகச் சிறந்த ஒட்டகம் ஒன்றை விலைக்கு வாங்குவேன். அதில் வருவேன்.

அதன் பிறகு உமைய்யா, உம்மே சுஃப்ஃபானே! எனது பயணத்திற்கான ஏற்பாட்டைச் செய்வீராக என்று தனது மனைவியிடம் கூறினான். அதற்கு அவரது மனைவி, உமது மதீனத்து நண்பர் உம்மிடம் கூறிய விஷயத்தை நீர் மறந்து விட்டீரா? கூறினாள். அதற்கு அவன், நான் மறக்கவில்லை. நான் கொஞ்சம் தூரம் அவருடன் சென்று விட்டு திரும்ப வந்து விடுவேன் என்று உமைய்யா கூறினான். மேலும் நான் கடைசி வரை செல்ல மாட்டேன் என்றும் கூறினான்.

உமைய்யா சென்றபோது எங்கெல்லாம் அவன் தங்கினானோ அங்கெல்லாம் தனது ஒட்டகத்தின் கடிவாளத்தை புறப்படுதற்கு ஆயத்தமாக முன் எச்சரிக்கையாக கட்டி வைத்திருந்தான். எந்த அளவுக்கு என்றால் அல்லாஹ் பத்ர் போரில் அவனை அழித்து விட்டான். (சஹீஹ் புகாரி, கிதாபுல் மகாஸி.... ஹதீஸ் எண் 3950)

இந்த கொலை சம்பவத்தைப் பற்றி முன்பும் ஓரிடத்தில் கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களைப் பற்றிய குறிப்பில் முந்தைய குத்பாவில் கூறப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் பிலால் அவர்கள் அன்ஸார்களை அழைத்துக் கொண்டு தம்மீது உமைய்யா இழைத்த அநீதிக்கு பகரமாக அவனை கொன்று விட்டார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: மதீனாவின் அவ்ஸ் கோத்திரத்தின் தலைவர் சஅத் பின் மஆஸ் அவர்கள் தவஃப் செய்வதற்காக மக்கா சென்றிருந்தார்கள். அப்போது அபூஜஹில் அன்னாரைக் கண்டு மிகவும் கோபத்துடன் கூறினான். அதாவது நீங்கள் முர்தத் ஆன முஹம்மது (ஸல்) அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்ததற்கு பிறகு கஃபத்துல்லாஹ்வில் பாதுகாப்பாக தவாஃப் செய்து விடலாம் என்று எண்ணுகின்றீரா? மேலும் நீர் அந்த நபரை பாதுகாக்கவும், உதவி செய்யவும் ஆற்றல் பெற்றிருக்கின்றீரா? இறைவன் மீது ஆணையாக! தற்போது உம்முடன் அபூ சுஃப்ஃபான் இல்லையென்றால் நீர் இங்கிருந்து தப்பித்து உமது குடும்பத்தினரிடம் செல்ல முடியாது.

சஅத் பின் மஆஸ் அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீர் எம்மை கஃபாவிலிருந்து தடுத்து விட்டால் பின்னர் நினைவிற் கொள்ளும். பின்னர் நீர் சிரியா செல்கின்ற உமது வழிப்பாதையிலிருந்து நீர் பாதுகாப்பாக செல்ல முடியாது.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 235,236)

ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் அவர்கள் பத்ர், உஹது மற்றும் அகழ் ஆகிய போர்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டிருந்தார்கள். பத்ர் போர் நாளன்று அவ்ஸ் கோத்திரத்தின் கொடி ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் அவர்களிடம் இருந்தது.

## திருக்குர்ஆனிலிருந்து...

நற்செயல் செய்பவர்களுக்கு(க்கூலி) சிறந்ததாகவும் (அருள்) மிகுதியாகவும் கிடைக்கும். அவர்கள் முகம் வாடவோ அவர்கள் இகழப்படவோ மாட்டார்கள். அவர்களே சொர்க்கத்திற்கு உரியவர்கள். அவர்கள் அதில் என்னென்றும் வாழ்ந்து வருவர். (10:27)

A.Basheer Ahmad, Sec.Waqf-e-jadid, Melapalayam

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 321,322 சஅத் பின் முஆஸ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பத்ர் போர் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் அவர்களின் வீரமும் பற்றும் மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பும், அர்ப்பணிப்பு உணர்வும் நமக்கு இந்த சம்பவத்திலிருந்து தெரிய வருகின்றது. பத்ர் போர் சந்தர்ப்பத்தின்போது அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வழங்கிய ஆலோசனைகளிலிருந்து நமக்கு அது வெளிப்படுகின்றது. அதனை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற புத்தகத்தில் குறிப்பிடுகின்றார்கள்.

முஸ்லிம்கள் சஃப்ரா என்ற இடத்தை அடைந்தார்கள். சஃப்ரா என்ற இடம் பத்ர் மற்றும் மதீனாவிற்கு இடையில் அமைந்துள்ள ஒரு பள்ளத்தாக்கு ஆகும். அங்குதான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் போர் வெற்றியின் மூலம் கிடைத்த அனைத்து செல்வங்களையும் முஸ்லிம்களுக்கு பங்கிட்டு கொடுத்தார்கள்.

எவ்வாறிருப்பினும் அந்த இடத்தை தாண்டி சஃப்ரான் என்ற ஊரை அடைந்தபோது முஸ்லிம்களுக்கு தகவல் ஒன்று கிடைத்தது. அதாவது வணிகக் குழுவின் பாதுகாப்பிற்காக குரைஷிகள் ஒரு பெரும் படை ஒன்றை திரட்டிக் கொண்டு மக்காவிலிருந்து புறப்பட்டு வருகின்றார்கள். மதீனத்துவாசிகள் அந்த வணிகக் குழுவின் மீது தாக்குதல் நடத்திவிடக்கூடும் என்ற ஐயம் அவர்களிடம் இருந்தது. இந்த விஷயம் இரகசியமாக இல்லாமல் அனைவருக்கும் தெரிந்திருந்தது.

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனைத்து சஹாபாக்களையும் ஒன்றுகூட்டி இந்த தகவலை கொடுத்தார்கள். மேலும் இப்போது நாம் என்ன செய்ய வேண்டும் என்று அவர்களிடம் ஆலோசனை கேட்டார்கள். அதற்கு சில சஹாபாக்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நமது தற்போதைய வெளிப்படையான காரணிகளைக் கொண்டு நாம் அந்த வணிகக்குழுவை எதிர்ப்பதே சிறந்ததாகும். ஏனென்றால் நம்மால் படையை எதிர்கொள்வதற்கு முழுமையாக தயாரிப்புகள் இல்லை என்று கூறினார்கள். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த கருத்தை விரும்பவில்லை.

மற்றொரு பக்கம் பெரும் சஹாபாக்கள் இந்த ஆலோசனையை கேட்டவுடன் ஒவ்வொருவராக எழுந்து நின்று உயிரை அர்ப்பணிப்பதாக உரை நிகழ்த்தினார்கள். அவர்கள் கூறினார்கள்: எங்களது உயிரும், செல்வமும் அனைத்தும் இறைவனுக்கே உரியதாகும். நாம் ஒவ்வொரு மைதானத்திலும் எல்லா வகையான தொண்டிற்கும் தயாராக இருக்கின்றோம்.

ஆக மிக்தாத் பின் அஸ்வத் அவருடைய இன்னொரு பெயர் மிக்தாத் பின் அம்ர் என்பதும் ஆகும். அவர் கூறினார்: அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் மூஸாவின் தோழரைப்போன்று உங்களிடம் நீரும் உமது இறைவனும் சென்று போரிடும். நாங்கள் இங்கேயே அமர்ந்து கொள்கின்றோம் என்று கூற மாட்டோம். மாறாக, நாங்கள் கூறுவது என்னவென்றால், நீங்கள் எங்களை எங்கே அழைத்துச் செல்ல விரும்புகின்றீர்களோ அங்கு அழைத்துச் செல்லுங்கள். நாங்கள் உங்களுக்கு வலப்புறமும் போரிடுவோம். இடப்புறமும் போரிடுவோம். உங்களுக்கு முன் நின்றும் போரிடுவோம். உங்களுக்கு பின் நின்றும் போரிடுவோம் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த சொற்பொழிவைக் கேட்டவுடன் அன்னாரது அருளுக்குரிய முகம் மகிழ்ச்சியில் பொலிவுற்றது. ஆனால் அந்த சந்தர்ப்பத்தின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்ஸார்களின் பதிலுக்காக காத்திருந்தார்கள். அன்னார் தலைவர்களில் எவராவது ஒருவர் இதே விஷயத்தை கூற வேண்டும் என்று எதிர்பார்த்தார்கள். ஏனென்றால் பைஅத்தே உக்பாவின் அடிப்படையில் மதீனாவில் இருக்கும்போது எவராவது தாக்குதல் நடத்தினால் அப்போது பாதுகாப்பதுதான் நமது கடமையாகும் என்று ஒருவேளை அன்ஸார்களில் எவராவது எண்ணலாம் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கருதினார்கள்.

எனவே உயிரை அர்ப்பணிப்பதற்கான சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்ட பிறகும் கூட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீண்டும் மீண்டும் எனக்கு ஆலோசனை கூறுங்கள்; எனக்கு ஆலோசனை கூறுங்கள். நாம் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டே இருந்தார்கள். அப்போது அவ்ஸ் கோத்திரத்தின் தலைவரான ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எண்ணத்தை புரிந்து கொண்டார்கள். மேலும் அன்ஸார்களின் சார்பாக அன்னார் இவ்வாறு கூறினார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நீங்கள் எங்களுடைய கருத்தை கேட்கின்றீர்கள் என்று எண்ணுகின்றேன். இறைவன் மீது ஆணையாக! நாங்கள் உங்களை உண்மையாளராக கருதி உங்கள் மீது நம்பிக்கை கொண்டுள்ளோம். நாங்கள் எங்களது கரத்தை உங்களது கரத்திடம் ஒப்படைத்து விட்டோம். இனி நீங்கள் எங்களை எங்கு அழைத்துச் செல்ல விரும்புகின்றீர்களோ அழைத்துச் செல்லுங்கள். உங்களை உண்மையுடன் அனுப்பிய அந்த இறைவன் மீது ஆணையாக! நீங்கள் எங்களை கடலில் குதிக்கும்படி கூறினால் நாங்கள் குதித்து விடுவோம். எங்களில் ஒருவர் கூட அதிலிருந்து பின்வாங்க மாட்டார். இன்ஷா அல்லாஹ் எங்கள் அனைவரையும் போரில் நீங்கள் பொறுமையாளராக காண்பீர்கள். உங்களது கண்களை குளிர்ச்சியூட்டக்கூடிய விஷயங்களையே நீங்கள் எங்களிடம் காண்பீர்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த கூற்றை கேட்டவுடன் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். அல்லாஹ்வின் பெயரை கூறி நீங்கள் இனி முன்னேறுங்கள் என்று கூறினார்கள். மேலும் நீங்கள் மகிழ்ச்சியடையுங்கள். ஏனென்றால் இறைவன் என்னிடம் வாக்குறுதி வழங்கியுள்ளான். நிராகரிப்பாளர்களின் அந்த இரண்டு கூட்டத்தினரின் அதாவது படை அல்லது வணிகக்குழுவின் மீது நிச்சயமாக நமக்கு வெற்றியை வழங்குவான். இறைவன் மீது ஆணையாக! எதிரிகள் ஆட்கள் கொலை செய்யப்படுகின்ற இடத்தை தற்போது நான் பார்த்துக் கொண்டிருக்கின்றேன்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 354,355)

பின்னர் அப்படியே நடந்தது. எவ்வாறிருப்பினும் இந்த குறிப்பு தொடர்ந்து கொண்டிருக்கின்றது. எஞ்சிய விஷயங்கள் இன்ஷா அல்லாஹ் அடுத்த குத்பாவில் கூறப்படும்.

## திருக்குர்ஆனிலிருந்து...

அவர்களுள் பெரும்பாலார் யூகத்தையே பின்பற்றுகின்றார்கள். நிச்சயமாக யூகம் உண்மையின் இடத்தில் எந்த பலனும் அளிப்பதில்லை. அவர்கள் செய்து கொண்டிருப்பதனை நிச்சயமாக அல்லாஹ் நன்கு அறிகின்றான். (10:37)

M.Y. Shahul Hameed, Melapalayam

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 30 July 2020 Issue No. 31

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

ANNUAL SUBSCRIPTION : Rs.500/- (Per Issue Rs. 9/-) (WEIGHT - 20-50 gms/issue)

## ஸய்யதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது ஐரோப்பா சுற்றுப் பயணம் (செப்டம்பர் & அக்டோபர் 2019)

♦ தேசிய தர்பிய்யத் செயலரிடம் ஹுஸூர் அவர்கள், தற்போது உங்களிடம் நான்கு பள்ளிவாசல்கள் இருக்கின்றன. ஃபஜர், மக்ரிப் மற்றும் இஷா ஆகிய தொழுகைகளுக்கு எத்தனை நபர்கள் வருகின்றனர்? என்று கேட்டார்கள்.

அதற்கு தர்பிய்யத் செயலர் அவர்கள், இந்த பள்ளிவாசல்களைத் தவிர நம்மிடம் பல்வேறு ஜமாஅத்துகளில் மொத்தம் 30 தொழுகை சென்டர்கள் இருககின்றன. அதை நாங்கள் வீடுகளில் ஏற்பாடு செய்துள்ளோம். 70 சதவீத மக்கள் ஐவேளை தொழுகையை நிறைவேற்றுகின்றனர். இவர்களில் 66 சதவீத மக்கள் ஜமாஅத்தாக தொழுகையை நிறைவேற்றுகின்றனர். 50 சதவீத மக்கள் சென்டருக்கு சென்று தொழுகையை நிறைவேற்றுகின்றனர்.

ஹுஸூர் அவர்கள் பாகிஸ்தானிலிருந்த வருகை தந்திருந்த முரப்பி அதீல் பாஸிம் சாஹிப் அவர்களைப் பற்றி கேட்டறிந்தவாறு, அவர்கள் எங்கே தங்கியுள்ளார்கள்? என்று கேட்டார்கள்.

அதற்கு, அவர் Arnhem ல் இருக்கின்றார். அங்கு ஜமாஅத் இரண்டு சென்டர்களை ஏற்படுத்தியுள்ளது. இவர்கள் சுழற்சி முறையில் இரண்டு சென்டர்களுக்கும் செல்கின்றார்கள். மேலும் தொழுகையை நடத்துகின்றார்கள் என்று கூறப்பட்டது.

♦ உள்ளூர் அளவில் குத்பா ஜுமுஆ (கொடுப்பது) தொடர்பாக முபல்லிக் இன்சார்ஜ் சாஹிப் அவர்களிடம் ஹுஸூர் அவர்கள், எப்போது ஆரம்பம் செய்வீர்கள்? மேலும் எப்போது முடிப்பீர்கள்? என்று கேட்டார்கள்.

அதற்கு முபல்லிக் இன்சார்ஜ் சாஹிப் அவர்கள், ஜமாஅத்தில் குத்பா ஜுமுஆ ஏறக்குறைய 1.30 மணிக்கு ஆரம்பம் செய்வோம். 10,15 நிமிடங்களுக்கு குத்பா இருக்கும். 2 மணிக்கு முன்பாக ஜுமுஆ தொழுகையை நிறைவேற்றி விட்டு (மக்கள்) விடைபெற்று விடுவோம். இதற்குப் பிறகு ஹுஸூர் அவர்களின் குத்பாவை நேரலையில் கேட்போம் என்று கூறினார்கள்.

அதற்கு ஹுஸூர் அவர்கள், நீங்கள் உங்களது குத்பாவில் கடந்த குத்பாவின் சுருக்கத்தை எடுத்துக்கூறும் அதேவேளையில் இங்குள்ள உள்ளூர் விவகாரங்களையும் எடுத்துக் கூறுங்கள். குறிப்பாக தொழுகையின் பக்கம் கவனமூட்டுங்கள் என்று கூறினார்கள்.

♦ ஹுஸூர் அவர்கள் சீர்திருத்தக்குழு நிறுவப்பட்டது தொடர்பாக கூறியவாறு, இதன் பொருள் என்ன என்று உங்களுக்குத் தெரியுமா? எங்கு (சீர்திருத்தக்குழு) இல்லையோ அங்கு ஏற்படுத்துங்கள் என்று கூறினார்கள்.

ஹுஸூர் அவர்கள் மேலும் கூறினார்கள்: இதன் பொருள் என்னவென்றால், பிரச்சனைகள் உருவாகுவதற்கு முன்பே கண்காணியுங்கள் என்பதாகும். சீர்திருத்தக்குழுவின் பணி என்னவென்றால், பிரச்சனைகள் ஏற்படுவது மற்றும் அதிகமாவது ஆகியவற்றிற்கு முன்பே அதை கண்காணிக்க வேண்டும். மேலும் ஆரம்பத்திலேயே சீர்திருத்தப் பணிகளுக்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

♦ தேசிய தர்பிய்யத் செயலர், சீர்திருத்தக்குழுவின் சேர்மன் அவர்கள் கூறினார்கள்: தேசிய குழு தவிர சில பெரிய ஜமாஅத்துகளிலும் இந்த குழு அமைக்கப்பட்டுள்ளது. சில விவகாரங்கள் சீர்திருத்தக் குழுவிற்கு வருகின்றது. சில விவாரங்கள் எப்படிப்பட்டதாக இருக்கின்றது என்றால் அது பெரிதாகி கஸாவிற்கு சென்று விடுகின்றது.

அப்போது உமூரே ஆமா செயலர் கூறினார்கள்: ஜெர்மனி ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தில் ஹுஸூர் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவைக் கேட்டு ஒரு தம்பதி தமது முடிவை மாற்றிக் கொண்டது. இவர்கள் இருவரும் பிரிந்து செல்லும் நிலையில் இருந்தனர். அப்போது அவர்கள் இருவரும் திரும்பி வந்தனர். அவர்கள் இருவரும் தமக்கிடையில் சமாதானம் செய்து கொண்டனர். மேலும் தனது அனைத்து கோரிக்கைகளையும் முடித்துக் கொண்டனர்.

♦ உமூரே கார்ஜாவின் தேசிய செயலரிடம் ஹுஸூர் அவர்கள், Almere–வில் பள்ளிவாசல் திறப்பு நிகழ்ச்சில் எத்தனை விருந்தினர்கள் வருகின்றனர்? என்று கேட்டார்கள்.

அதற்கு அவர்கள், பாராளுமன்றம் இன்றைய நாட்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அரசாங்கத்தின் பல்வேறு துறைகளிலிருந்து விருந்தினர்கள் வருவார்கள் என்று கூறினார்கள்.

அதற்கு ஹுஸூர் அவர்கள், இத்தகைய நிகழ்ச்சிகளை நடத்தும்போது எந்த தேதியில் நாம் நடத்த வேண்டுமென்றாலும் ஆய்வு செய்த பிறகு (தேதியை) நிர்ணயிக்க செய்ய வேண்டும்.

மேலும் ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: உங்களது சில அகதிகள் தொடர்பான வழக்கு நிலுவையில் உள்ளது. இதை விரைவாக முழுமை செய்யுங்கள்.

அதற்கு அவர்கள், அரசாங்கம் சில துறைகளில் பணியாளர்களை குறைத்துள்ளது. இதன் காரணமாக காலதாமதம் ஏற்பட்டுள்ளது. இன்ஷா அல்லாஹ் இந்த வருடம் விரைவாக இந்த வழக்குகள் முடிவு பெற்று விடும்.

♦ சனத் வ திஜாரத்தின் தேசிய செயலருக்கு ஹுஸூர் அவர்கள் வழிகாட்டல் வழங்கியவாறு கூறினார்கள்: இங்கு அஸைலம் கேட்டு மக்கள் வந்துள்ளனர். சிலர் எமிகிரேஷன் முடிந்தும் வந்துள்ளனர். இவர்களுடன் இணைந்து பணியாற்றுங்கள். ஒருவர் மற்றொருவருக்கு உதவியாகவும் இருக்கும்.

(உருது பத்ர் 14 நவம்பர் 2019 – தொடரும்...)

நேர்மையை நேசிப்போம்
நேர்மையின்மையை வெறுப்போம்

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad